# டிரினிடி மகளிர் கல்லூரி, நாமக்கல்
# தமிழ்த்துறை

## தொல்காப்பியம் – சொல்லதிகாரம் (21PTA07 )

இரட்டைப் பருவம்


வழங்கியவர்

முனைவர் ப.பிரதீபா

உதவிப் பேராசிரியர்

தமிழ்த்துறை

http://www.trinitycollegenkl.edu.in/

# சொல்லதிகார இயல்கள்

- கிளவியாக்கம்
- வேற்றுமை இயல்
- வேற்றுமை மயங்கியல்
- விளிமரபு
- பெயரியல்
- வினையியல்
- இடையியல்
- உரியியல்
- எச்சவியல்

# கிளவியாக்கம்

## இளம்பூரணர்

சொற்கள் பொருள் மேலாமாறு உணர்த்தினமையின் கிளவியாக்கம் என்னும் பெயர்த்தாயிற்று.

(சொற்கள் பொருள் புரியுமாறு உணர்த்தியதால் கிளவியாக்கம் எனும் பெயராயிற்று )

## சேனாவரையர், நச்சினார்க்கினியர்

வழுக்களைந்து சொற்களை அமைத்துக் கொண்டமையால் கிளவியாக்கம் ஆயிற்று.

(சொற்களை பிழையில்லாமல் அமைத்ததால் கிளவியாக்கம் எனும் பெயராயிற்று. )

தொடர்ச்சி.....

# கிளவியாக்கம்

**தெய்வச்சிலையார்**

சொற்கள் ஒன்றோடொன்று தொடர்ந்து பொருள் மேலாகும் நிலைமையைக் கூறுவது இவ்வியலாதலின் கிளவியாக்கம் என்னும் பெயர்த்தாயிற்று.

( சொற்கள் ஒன்றோடு ஒன்று தொடர்ந்து பொருள் உணர்த்தும் நிலையைக் கூறுவதால் கிளவியாக்கம் எனும் பெயராயிற்று. )

# திணை - 2

திணை எனும் சொல்லுக்கு நிலம், குலம், ஒழுக்கம் என்பது பொருள். இங்கு திணை என்பது ஒழுக்கம் என்பது பொருளாகும். திணை இரண்டு வகைப்படும்.

உயர்திணை

அஃறிணை

உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே
அஃறிணை என்மனார் அவரல பிறவே
ஆயிரு திணையின் இசைக்குமன சொல்லே.

(தொல்.சொல்.1)

# திணை, பால், எண்

## உயர்திணை

மக்களைக் குறிக்கும் சொல் உயர்திணை.

எ.கா

தமிழரசன்
இறையனார்
தொல்காப்பியர்
ஆசிரியர்

## அஃறிணை

மக்கள் அல்லாத பிறவற்றைக் குறிக்கும் சொல் அஃறிணை.

எ.கா

ஆடு
மலை
மரம்
நாற்காலி

# உயர்திணை பால்கள் - 3

ஆடூஉ அறிசொல் மகடூஉ அறிசொல்
பல்லோ ரறியும் சொல்லோடு சிவணி
அம்முப் பாற்சொல் உயர்திணை அவ்வே
( தொல். சொல்.2 )

## ஆண்பால்

ஆணைக் குறிக்கும் சொல் ஆண்பால்.

எ.கா - வளவன், தமிழரசன்

## பெண்பால்

பெண்ணைக் குறிக்கும் சொல் பெண்பால்.

எ.கா - பொன்னி, தமிழரசி

## பலர்பால்

பலரைக் குறிக்கும் சொல் பலர்பால்.

எ.கா - தொழிலாளர், வந்தார்கள்

# அஃறிணை பால்கள் - 2

ஒன்றறி சொல்லே பலவறி சொல்லே
ஆயிரு பாற்சொல் அஃறிணை யவ்வே
( தொல். சொல்.3)

**ஒன்றன்பால்**

ஒரு பொருளைக் குறிக்கும் சொல் ஒன்றன்பால்.

எ.கா

மரம், அது, நாற்காலி

**பலவின்பால்**

பல பொருளைக் குறிக்கும் சொல் பலவின்பால்.

எ.கா

மரங்கள், அவை, நாற்காலிகள்

# உயர்திணையில் அடங்கும் பிற பெயர்கள்

பெண்மை சுட்டிய உயர்திணை மருங்கின்ஆண்மை
திரிந்த பெயர்நிலைக் கிளவியும்
தெய்வம் சுட்டிய பெயர்நிலைக் கிளவியும்
இவ்வென அறியும்அந் தந்தமக் கிலவே
உயர்திணை மருங்கின் பால்பிரிந்து இசைக்கும்

( தொல். சொல்.4 )

- ஆண்மைத் தன்மை குறைந்து பெண்மைத்தன்மை மிகுந்து விளங்கும் ஆண்மை திரிந்த பெயர்ச்சொல்.
- தெய்வத்தை குறிக்கும் பெயர்ச்சொல்.
  - இவ்விரண்டையும் குறிக்க தனித்த விகுதிகள் இல்லை.

தொடர்ச்சி.....

# உயர்திணையில் அடங்கும் பிற பெயர்கள்

ஆண்மை திரிந்த பெயர்ச்சொல்.

எ.கா

பேடி வந்தாள்

பேடி வந்தார்

பேடி வந்தனர்

தெய்வத்தை குறிக்கும் பெயர்ச்சொல்.

எ.கா

தேவன் வந்தான்

தேவி வந்தாள்

தேவர் வந்தனர்

# நன்றி

http://www.trinitycollegenkl.edu.in/